# பாரதிதாசனின் பாடல்களில் வண்ணம்

*முனைவர் த. தாழைச்செல்வி*
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*நாடார் சரசுவதி கலை மறறும் அறிவியல் கல்லூரி*
*தேனி*

**முன்னுரை**

**இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்**
**இன்பத் தரும்படி வாய்த்தநல் அமுது**

என்று தமிழைத்தன் உரிமையாகப் போற்றுபவர் பாரதிதாசன்.தமிழின் இலக்கணங்களைக் காத்துத் தந்தவர் தொல்காப்பியர். தாய்மொழியாம் தமிழ்மொழியைக் காக்கும் பொருட்டு தன் வாழ்நாளை அர்பணித்தவர்.பழங்கால மரபுகளையும் காத்து புதுமைக்கால உரைகளோடு கவிதை அழகோடு நம்மோடு உரையாடுபவர் பாரதிதாசன். பாரதிதாசனின் பாடல்களில் தொல்காப்பியரின் இலக்கணங்களை ஆராய்வது ஓடும் ஆற்றில் ஒரு துளி நம்மை நனைப்பது போன்றது. எனினும் பாரதிதாசன் பாடல்களில் தொல்காப்பியரின் செய்யுள் உறுப்புக்களை ஆராய்ச்சி செய்வது இன்னும் தொல்காப்பியரின் பெருமையையும் பாரதிதாசன் பாடல்களின் அழகையும்அள்ளிக் கொடுக்கும் நோக்கமே ஆகும்.

அத்தகைய நோக்கில் பாரதிதாசனின் பாடல்களில் குறிப்பாக தமிழ் என்ற தலைப்பின்கீழ் வரும் தமிழின்இனிமை, இன்பத்தமிழ், தமிழ்உணவு, தமிழ்ப்பேறு, எங்கள்தமிழ், தமிழ்வளர்ச்சி, தமிழ்க்காதல், எந்நாளோ, சங்கநாதம், தமிழ்க்கனவு ஆகிய பாடல்களில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள செய்யுள் உறுப்புக்கள் முப்பத்துநான்கில் வண்ணம் என்னும் உறுப்பு இடம்பெற்றுள்ள அழகைப் பற்றிய பதிவுகள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

**வண்ணம் - விளக்கம்**

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள செய்யுள் உறுப்புக்களில் ஒன்று வண்ணமாகும். வண்ணம் என்பது சந்த வேறுபாடு.நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் வண்ணம் என்பதை,'எழுத்து வகையான் அமையும் சந்தக் கூறுபாடு இருபது வகையாகும்' என்கின்றனர். வண்ணம் என்பது நூற்றுக்கு மேலாக உள்ளதாக யாப்பருங்கலவாசிரியர் முதலிய பலர் குறிப்பிடுகின்றனர். எனினும் அவ்வண்ணங்கள் யாவும் இவ்விருபது வண்ணங்களில் அடங்கும் என்கிறார் பேராசிரியர். இவ்வண்ணத்தின் வகைகள் நுண்ணுணர்வுடையார்க்கு மட்டுமே புலனாகுமென்கிறார் நச்சினார்க்கினியர்.

**வண்ணத்தின் வகைகள்**

வண்ணத்தின் வகையைத் தொல்காப்பியர்,

**"வண்ணந் தாமே நாலைந் தென்ப"** **(தொல்.,நூ.204)**

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். வண்ணத்தின் வகைகள் நான்கும் ஐந்தும் பெருக்க மொத்தம் இருபது என்கின்றார். வண்ணத்தின் இருபது வகைகளை,

**"பாஅ வண்ணம் தாஅ வண்ணம்**
**வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்**
**இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்**
**நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்**
**சித்திர வண்ணம் நலிபு வண்ணம்**
**அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்**
**ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்**
**எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்**

**தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்**
**உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்று**
**ஆங்கென மொழிப அறிந்திசி னோரே!'' (தொல்.,நூ.205)**

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள வண்ணத்தின் வகைகளைப் பாரதிதாசனின் பாடல்களில் பொருத்திப் பார்ப்பதிலிருந்து பாரதிதாசன் மரபுகளைப் பின்பற்றும் பண்பாளர் என்ற கருத்து புலனாகும்.

**பாஅ வண்ணம்**

பாஅ வண்ணம் என்பது சொற்சீரடித்தாகி வரும் முறையாகும். சொற்சீர்த்திறுதலாவது, ஓரெழுத்தொரு மொழி முதலிய சொற்களெல்லாம் சீராய் நின்று அடியிறுதிப்பட முடிதலாகும்.இதனை,

**''அவற்றுள்**
**பாஅ வண்ணம்**
**சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்'' (தொல்., நூ.206)**

இன்னும் விளக்கமாக ஆராய்ந்தால்,''பாட்டின்றித் தொடுக்கப்படும் கட்டுரைக்கண் சொல்வது போல் எண்ணொடு கூடியும், முற்றிய நாற்சீரடியின்றி முச்சீரடியானும் இருசீரடியானும் குறைவாகிய சீரையுடையதாகியும், ஒழிந்த அசையினையுடையதாகியும், ஒரு சீரின் பின்னே பிறிதொரு சீர்வரத் தொடுக்கப்படாது அசைவரத் தொடுக்கப்படடுச் சொல்தானே சீராந்தன்மையைப் பெற்று நிற்றல் சொற்சீரடியின் இயல்பாகும்'' என்பது நச்சினார்க்கினியர் கூற்றாகும். இதன் மூலம் சொற்சீரடி என்பது,

- எண்ணொடு வருதல்
- குறைவாகிய சீரடி
- வேறொரு அசையொடு சேராமல் நிற்கும் இயலசை
- பலஅசைகளோடு சேர்ந்து வந்து நிற்கும் அசை

என்ற கருத்துக்கள் அறியலாகின்றன. தனியாக அசை நிற்பதைப் பாரதிதாசன் பாடல்களில்,

**''தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ'' (இன்பத்தமிழ், ப.82)**

**''ஒன்றெனச் செய்ததுவே – நல்'' (தமிழ் உணவு, ப.84)**

என்ற வரிகளில் தீ, நல் என்ற சொற்கள் நேரசையாக நின்று சொற்சீரடியாக வந்துள்ளன.

**இனிமைத் தமிழ்மொழி எமது –எமக் (எங்கள் தமிழ், ப.86)**

**அங்கதப் பாட்டினிலே –சுவை (தமிழ் உணவு, ப.84)**

என்ற வரிகளில் எமக், சுவை முதலிய சொற்கள் நிரையசையாக நின்று சொற்சீரடியாக வந்துள்ளன. தமிழ் உணவு என்ற பாடலில் பல வரிகளில் நிரையசையாக நின்று சொற்சீரடிகள் வந்துள்ளன.

**தாஅ வண்ணம்**

தாஅ வண்ணம் என்பது தவளை பாய்ந்தாற் போன்று ஓரடிவிட்டு ஓரடியில் தாவியமைந்த எதுகையையுடையது ஆகும். தாவுதல் என்பது இடைவெளியுள்ளதாகத் தாவிக்குதித்தல் ஆகும்.இவ்வண்ணத்தை,

**தாஅ வண்ணம்**

**''இடையீட்டு வந்த எதுகைத் தாகும்.'' (தொல்., நூ.207)**

என்ற நூற்பாவால் அறியலாம். அவ்வண்ணத்தை,

**''கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்**
**கழையிடை ஏறிய சாறும்**
**பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்**
**பாகிடை ஏறிய சுவையும்**
**நனிபசுபொழியும் பாலும் - தென்னை**
**நல்கிய குளிரிள நீரும்**

**இனியன என்பேன் எனினும் - தமிழை**
**என்னுயிர் என்பேன் கண்டீர்'' (தமிழ் இனிமை, ப.80)**

என்று கனி, பனி, நனி, இனி என்ற சொற்கள் மூலம் அமைந்துள்ளதைக் காணலாம்.

மேலும் நீலச்சுடர் மணிவானம் (தமிழ் இனிமை), ஆற்றங்கரை தனிலே - இருள் (தமிழ் உணவு, நாட்டின் நிலை பேசிப் - பல (தமிழ் உணவு) முதலிய பாடல்களில் தாஅ வண்ணம் அமைந்து பாடல்களுக்கு அழகு சேர்க்கின்றன.

**வல்லிசை வண்ணம்**

வல்லெழுத்து (வல்லொற்று) மிக்கு வருவது வல்லிசை வண்ணமாகும்.

**''வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே'' (தொல்., நூ.208)**

அவ்வண்ணத்தை,

**''நாட்டும் சீரத் தமிழன் இந்த**
**நானில மாயம் கண்டு**
**காட்டிய வழியிற் சென்று**
**கதிபெற வேண்டும் என்றே**
**ஆட்டும் சுட்டுவிரல் கண்டே**
**ஆடிற்று வையம் என்று**
**கேட்டு நான் இன்ப ஏற்றுக்**
**கேணியிற் குளிப்ப தெந்நாள்?'' (எந்நாளோ, ப.90)**

என்ற பாடலில் வல்லொற்று அடிதொறும் பயின்று வருவதைக் காணலாம். மேலும் சீர்தோறும் வல்லொற்று மிக்கு வந்தாலும் வல்லிசை வண்ணமாகும்.

**'பேசிடும் பேச்சினில் பாட்டு நடத்தினள்' (தமிழ் உணவு, ப.83)**
**'அப்புறம் இப்புறம் போக விடாதடி' (தமிழ் உணவு, ப.84)**
**'ஆட்டத்தினால் தளிர் ஊட்டத்தினால்' (தமிழ்க்காதல், ப.87)**
**'கொட்டி விட்டாள் எனைத் தொட்டிழுத்தாள்' (தமிழ்க்காதல், ப.87)**
**'தறுக்கினாற் பிறதே சத்தார்' (எந்நாளோ, ப.90)**
**'இறக்கை கட்டிப் பறக்கின் றார்கள்' (தமிழ்க்கனவு, ப.92)**

என்ற பாடல் வரிகளில் வல்லோசை மிக்கு வருவதைக் காணலாம்.

**மெல்லிசை வண்ணம்**

மெல்லெழுத்து மிக்கது மெல்லிசை வண்ணமாகும். இதனை,

**''மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே'' (தொல்., நூ.209)**

என்ற நூற்பாவால் அறியலாம்.

**''விண்ணிடை இரதம் ஊர்ந்து**
**மேதினி கலக்கு தற்கும்**
**பண்ணிடைத் தமிழைச் சேர்த்துப்**
**பாரினை மயக்குதற்கும்**
**மண்ணிடை வாளை யேந்திப்**
**பகைப்புலம் மாய்ப்ப தற்கும்**
**எண்ணிலாத் தமிழர் உள்ளார்**
**எனும் நிலை காண்பதென்றோ?'' (எந்நாளோ, ப.90)**

என்று அடிதோறும் மெல்லொற்று வருவதைக் காணலாம். எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் என்ற பாடலிலும் அடிதோறும் மெல்லொற்று வருவதைக் காணலாம். மேலும் சீர்தோறும் மெல்லொற்று மிக்கு வருவதை,

**'என்னை எழுதென்று சொன்னது வானம்' (தமிழ்ப்பேறு, ப.85)**
**'இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்' (எங்கள் தமிழ், ப.86)**
**'அமையும் அன்னங்கள் மென்னடையால்' (தமிழ்க்காதல், ப.81)**

என்ற வரிகளில் காணலாம்.

**இயைபு வண்ணம்**

இடையெழுத்து மிக்கு வருவது இயைபு வண்ணமாகும். ‘ஒரு செய்யுள் முழுவதும் ஓரின எழுத்தே பயின்று வரச்செய்தல் கேட்போருக்கு இன்னோசைத்தாமாதலின், அங்ஙனம் ஓரினத்தெழுத்தே முழுதும் வாராது உறுப்பாய எழுத்துக்கள் இடையிடையே மிக்குப் பலவாய் வரும்’என்கிறார் பேராசிரியர். வன்மைக்கும் மென்மைக்கும் இடைநிகர்த்த ஓசையினைப் பெற்று வருவது இயைபு வண்ணமாகும். இதனை,

**“இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே” (தொல்., நூ.210)**

என்பதால் அறியலாம். அடிதொறும் மெல்லெழுத்து வருவதை,

**வெள்ளம் போல் தமிழர் கூட்டம்**
**வீரங் கொள் கூட்டம் அன்னார்**
**உள்ளத்தால் ஒருவ ரேமற்**
**றுடலினால் பலராய்க் காண்பார்**
**கள்ளத்தால் நெடுங்கொ ணாதே**
**என வயைம் கலங்கக் கண்டு**
**துள்ளும் நாள் எந்நாள்? உள்ளம்**
**சொக்கும் நாள் எந்நாளோ? (எந்நாளோ, பக்.90)**

என்ற பாடலில் காணலாம். சீர்தோறும் வருவதை துள்ளும் நாள் எந்நாள்? உள்ளம்என்ற வரிகளில் அறியலாம்.

**கடல் மேல் எல்லாம் ஒளியாம் (தமிழின் இனிமை, பக்.81)**
**நீரையும் நிலவையும் தமிழர் குலத்தையும் (தமிழ் உணவு, பக்.84)**
**கோலங்கள் யாவும் மலை மலையாய் வந்து (தமிழ்ப்பேறு, பக்.85)**

என்ற வரிகளில் சீர்தோறும் இயைபு வண்ணம் பயின்று வந்தமையைக் காணலாம்.

நெடுஞ்சீர் வண்ணம்

**நெட்டெழுத்து பயின்று வருவது நெடுஞ்சீர் வண்ணமாகும். இதனை,**

**நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்(தொல்., நூ.212)**

என்ற நூற்பாவால் அறியலாம்.இவ்வண்ணம் பாரதிதாசனின் பாடலில் அடிதோறும் இடம்பெறுவதை,

**தாயெழிற் றமிழை என்றன்**
**தமிழரின் கவிதை தன்னை**
**ஆயிரம் மொழியிற் காண**
**இப்புவி அவாவிற் றென்றே**
**தோயுறும் மதுவின் ஆறு**
**தொடர்ந்தென்றன் செவியில் வந்து**
**பாயு நாள் எந்நாளோ? (எந்நாளோ, பக்.89)**

என்ற பாடலில் காணலாம். எடுத்துக்கொண்ட பாடல்களில் சீரில் நெடுஞ்சீர் வண்ணம் வரவில்லை.
குறுஞ்சீர் வண்ணம்

**குற்றெழுத்து பயின்று வருவது குறுஞ்சீர் வண்ணமாகும். இதனை,**

**குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்து பயிலும் (தொல்.,நூ.213)**

என்ற நூற்பா உணர்த்துகின்றது. இவ்வண்ணத்தை,

**என்னருந் தமிழ்நாட் என்கண்**
**எல்லோரும் கல்வி கற்றுப்**
**பன்னருங் கலைஞா னத்தால்**
**பராக்கிர மத்தால், அன்பால்**
**உன்னத இம்ம லைபோல்**
**ஓங்கிடும் கீர்த்தி யெய்தி**
**இன்புற்றார் என்று மற்றோர்**
**இயம்பக் கேட்டிடல்எந் நாளோ? (எந்நாளோ?, பக்.88)**

என்ற பாடலில் அடிதோறும் குறுஞ்சீர்வண்ணம் இடம்பெற்றுள்ளது. சீர்தோறும் இடம்பெறுவதை,

**வெளியுலகில்,சிந்தனையில் புதிதுபுதிதாக**
**விளைந்துள்ளஎவற்றினுக்கும்பெயர்களெலாங் கண்டு**
**தெளிவுறுத்தும் படங்களொடுசுவடியெலாம்செய்து (தமிழ் வளர்ச்சி,பக்.87)**

என்ற வரிகளில் அடிதோறும் சீர்தோறும் ஒவ்வொரு எழுத்துக்களும் குற்றெழுத்தாய் அமைந்து குறுஞ்சீர் வண்ணம் சிறப்பாய் அமையப் பெற்றிருப்பதைக் காணலாம்.

**சித்திர வண்ணம்**

**சித்திர வண்ணத்தைத் தொல்காப்பியர்,**
**நெடியவுங் குறியவும் நேர்ந்துடன் வருமே (தொல்., நூ.214)**

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் ஒப்ப விரவி அமைந்திருப்பது சித்திரவண்ணமாகும். இதனை,

**சோலைக் குளிர்தரு தென்றல் வரும், பசுந்**
**தோகை மயில் வரும் அன்னம் வரும்**
**மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்**
**மாணிக்கப் பரிதி காட்சி தரும் (தமிழ்ப்பேறு, பக்.85)**

என்று அடிதோறும் முதல் சீரில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

**அகப்பாட்டு வண்ணம்**

**முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே (தொல்.,நூ.216)**

அகப்பாட்டு வண்ணமென்பது முடித்துக்காட்டும் ஈற்றசை ஏகாரத்தாலன்றி ஒழிந்த உயிரீற்றானும் ஒற்றீற்றானும் வருவன ஆகும். சொல்லக் கருதிய பொருள் முற்றுப் பெற்ற நிலையில் செய்யுள் முடியாதது போன்று அமைந்த ஓசைத்திறம் அகப்பாட்டு வண்ணமாகும். இதனை,

**தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ (இன்பத்தமிழ்,பக்.82)**
**இன்பம் எனத் தமிழ் நாட்டினர் எண்ணுக! (தமிழ் உணவு, பக்.85)**
**தூய்மை யுண்டாகிடும் வீரம் வரும் (தமிழ்ப்பேறு, பக்.86)**
**தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர் (தமிழ் வளர்ச்சி, பக்.87)**
**கொட்டிவிட்டாள் எனைத் தொட்டிழுத்தாள் (தமிழ்க்காதல், பக்.88)**

என்ற பாடலின் இறுதிவரிகள் அகப்பாட்டில் அமைந்துள்ளன.

**புறப்பாட்டு வண்ணம்**

புறப்பாட்டு வண்ணமாவது செய்யுள் முடிந்த நிலையிலும் அதனாற் சொல்லக் கருதிய பொருள் செய்யுளின் புறத்தேயும் விரிந்து நிற்பது போன்று அமைந்த ஓசைத்திறம் ஆகும். இதனை,

**புறப்பாட்டு வண்ணம்**
**முடிந்தது போன்று முடியா தாகும் (தொல்.,நூ.217)**

என்ற நூற்பாவால் அறியலாம். இவ்வண்ணம்,

**நைந்த தமிழரொடு நானிருந்தேனே! (தமிழ்க்கனவு, பக்.92)**

என்னும் இறுதி வரியில் மட்டும் ஏகாரம் பெற்று அமைந்துள்ளதைக் காணலாம். எனினும் பேராசிரியர் ஈற்றயலடி செய்யுள் முடிந்தது போல் ஏகாரம் பெற்றாலும் ஈற்றடியும் ஏகாரம் பெற்று வருவதே புறப்பாட்டு வண்ணம் என்கிறார். அது இப்பாடல்களில் அமையவில்லை.

**ஒழுகு வண்ணம்**

ஆற்றொழுக்குப் போன்று இடையீடின்றி தொடர்ந்து செல்லும் ஓசையால் இயன்றது ஒழுகு வண்ணம் ஆகும்.

**ஒழுகு வண்ணம் ஓசையி னொழுகும் (தொல்.,நூ.218)**

என்ற நூற்பா ஒழுகுவண்ணத்தைக் குறிப்பிடுகின்றது.

**இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்**
**கின்பத் தரும்படி வாய்த்தநல் அமுது**

**"கனியைப் பிழிந்திட்ட சாறு – எங்கள்**

**கதியில் உயர்ந்திடயாம் பெற்ற பேறு!" (எங்கள் தமிழ், பக்.86)**

என்ற பாடலில் இடையீடின்றி தொடர்ந்து செல்லும் ஓசையைக் காணலாம். இதுபோன்று பல பாடல்கள் அமைந்துள்ளன.

**ஒரூஉ வண்ணம்**

**"ஒரூஉ வண்ணம் ஒரூஉத் தொடை தொடுக்கும்" (தொல்.,நூ.219)**

ஒரூஉத்தொடை என்பது செந்தொடையால் வருவது என்கிறார் இளம்பூரணர். ஒரு தொடையும் அமையப் பெறாதது செந்தொடை என்பது பிற்கால யாப்பிலக்கண நூலார் கொள்கையாகும்.

எனினும் ஒரூஉத்தொடையாவது நடு இருசீர்க்கண்ணும் இன்றி முதற்சீர்க்கண்ணும் நாலாஞ்சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பதாகும். எனவே ஒரூஉ வண்ணம் என்பது ஒரூஉத்தொடை தொகுத்து வருவதே என்பதே பொருத்தமாகும். இவ்வண்ணத்தை,

**'குத்து விளக்கினைப் போன்ற குழந்தைகள்' (தமிழ் உணவு, ப.83)**

**'மங்காத தமிழென்று சங்கே முழங்கு' (சங்கநாதம், ப.91)**

**'குவியுது பணங்கள் மலைபோற் குவியுது' (தமிழ்க்கனவு, ப.92)**

**'கரைத்துக் குடித்துக் கனிந்த கவிஞர்கள்' (தமிழ்க்கனவு, ப.93)**

**'கற்கண்டு மொழியில் கற்கண்டுக் கவிதைகள்' (தமிழக்கனவு, ப.93)**

**'காற்றி லெலாம் கலந்தது கீதம்' (தமிழக்கனவு, ப.93)**

என்ற வரிகளிலெல்லாம் காணலாம்.

**எண்ணு வண்ணம்**

**'எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்' (தொல்., நூ.220)**

அடிதோறும் எண்ணுதற் பொருளில் பயின்று வருவது எண்ணு வண்ணமாகும். இவ்வண்ணத்தை,

**"கைத்திறச் சித்திரங்கள்,**
**கணிதங்கள் வான நூற்கள்,**
**மெய்த்திற நூற்கள், சிற்பம்**
**விஞ்ஞானம், காவியங்கள்**
**வைத்துள தமிழர் நூற்கள்" (எந்நாளோ, பக்.88-89)**

**"திங்களோடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்**
**மங்குல்கடல் இவற்றொடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்" (சங்க நாதம், பக்.91)**

என்ற வரிகளில் எண்ணு வண்ணம் அமைந்துள்ளதைக் காணலாம்.

**அகைப்பு வண்ணம்**

**'அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்' (தொல்.,நூ.221)**

அறுத்தறுத்துப் பயில்வது அகைப்பு வண்ணமாகும். ஒருவழி நெடில் பயின்றும் ஒருவழிக் குறில் பயின்றும் அறுத்தொழுகியது அகைப்பு வண்ணம் என்பர்.

**'தீராதி தீரரென்றூது சங்கே!' (சங்க நாதம்., பக்.91)**

என்ற வரியில் தீரா, தீர என்று அமைந்து வருவதால் அகைப்பு வண்ணத்தை அறியலாம்.

**ஏந்தல் வண்ணம்**

**"சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்" (தொல்.,நூ.223)**

ஏந்தல் வண்ணமாவது சொல்லிய சொல்லினாலே சொல்லப்படும் பொருள் சிறப்பச் செய்வது ஆகும்.

**'ஓடினார் ஓடினார் ஓடினார் நடந்தே!' (தமிழக்கனவு, ப.92)**

**முடுகு வண்ணம்**

**“முடுகு வண்ண முடிவறி யாமல்**

**அடியிறந் தொழுகி அதனோர் அற்றே” (தொல்., நூ.225)**

முடுகு வண்ணமாவது நாற்சீரடியான் மிக்கோடி அராகத்தோடு ஒக்கும்.

**உவகை பெறச் செய்ததே தமிழ்ப் போசனம் (தமிழ் உணவு, ப.84)**

**இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் (தமிழ்ப்பேறு, ப.86)**

என்ற வரிகள் ஐந்து சீரால் வருவதைக் காணலாம்.

**நிறைவுரை**

செய்யுளுக்கு அழகு சேர்க்கும் உறுப்புக்களை அள்ளித் தந்தவர் தொல்காப்பியர். அதனைத் தன் பாடல்களில் கிள்ளிக் கொடுத்தவர் பாரதிதாசன். மரபுக்கவிதைகளில் புதியதோர் மாற்றம் செய்து எனினும் பழைய செய்யுள் மரபுகளைப் பாதுகாத்து அழகோடு நமக்கு அளித்திருக்கின்றார் பாரதிதாசன். கவி இயற்றும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள செய்யுளுக்கு அழகு சேர்க்கும் உறுப்புக்களும் அதனைக் கடைபிடித்த பாரதியார், பாரதிதாசன் போன்ற மிகப்பெரிய கவிஞர்களின் படைப்புக்களும் இடம்பெற்றால் கவிதையும் அழகு பெறும். மரபும் அழியாது. எனவே பழமை அழியாமல் புதுமைக் கவிகள் செய்வோம்.